


16. 07. 2026

## தலைப்புச் செய்திகள்

1. த.வெ.க. தலைமையிலான அரசு ஊழலற்ற அரசாக திகழ வேண்டியதன் அவசியத்தை முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் வலியுறுத்தி உள்ளார்.

2. CBSE பள்ளிகளில் 9-ம் வகுப்பு பாடத்திட்டத்தில் 3-வது மொழி அறிமுகம், மாணாக்கரின் மன அழுத்தத்தை அதிகரிக்கும் என்று உச்சநீதிமன்றம் கவலை தெரிவித்துள்ளது.

3. தமிழ்நாட்டில் லாக்கப் மரணத்திற்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் கூறியுள்ளார்.

4. தமிழ்நாட்டில் இன்று 15 மாவட்டங்களில் வெப்ப அலை வீசக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 2-வது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி கார்டிஃபில் இன்று நடைபெறுகிறது.

## இனி விரிவான செய்திகள்

. . . . . . . . . .

### தமிழக அமைச்சரவை கூட்டம்

தமிழ்நாட்டில் த.வெ.க. தலைமையிலான அரசு ஊழலற்ற அரசாக திகழ வேண்டியதன் அவசியத்தை முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் வலியுறுத்தி உள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் பேசிய அவர், ஊழல் புகாரில் சிக்கும் அமைச்சர்களின் பதவி உடனடியாக பறிக்கப்படும் என்று எச்சரித்துள்ளார்.

தனது தலைமையிலான அரசு வெளிப்படை தன்மையுடன் செயல்படுவதன் அவசியத்தை வலியுறுத்திய முதலமைச்சர், எவ்வித பாரபட்சமுமின்றி தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

ஆய்வு என்ற பெயரில் பள்ளிகளுக்கும், அரசு அலுவலகங்களுக்கும் செல்வதை அமைச்சர்கள் தவிர்க்க வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

. . . . . . . . . .

உச்சநீதிமன்றம்

CBSE பள்ளிகளில் 9-ம் வகுப்பு பாடத்திட்டத்தில் 3-வது மொழி அறிமுகம், மாணாக்கரின் மனஅழுத்தத்தை அதிகரிக்கும் என்று உச்சநீதிமன்றம் கவலை தொிவித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிபதிகள் B.V. நாகரெத்தினா, ஆர்.மகாதேவன் அடங்கிய அமர்வு, எனவே 3-வது மொழியை, 9-வது வகுப்பில் அறிமுகம் செய்ய வேண்டாம் என வாய்மொழியாக மத்திய அரசை அறிவுறுத்தி உள்ளது.

5 அல்லது 6-ம் வகுப்புகளில் 3-வது மொழி கொண்டுவரப் பட்டால் மாணாக்கரால் அதனை சமாளிக்க முடியும் என நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

. . . . . . . . . .

பூரி ஜெகந்நாதர்

பூரி ஜெகந்நாதர் கோவில் ரத யாத்திரை இன்று நடைபெறுவதை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திரமோடி உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தொிவித்துள்ளனர்.

அனைவரது வாழ்விலும் ஆரோக்கியம், மகிழ்ச்சி, வளத்தை இவ்விழா கொண்டுவரட்டும் என வாழ்த்தியுள்ளனர்.

. . . . . . . . . .

ராஜ்நாத் சிங்

நாட்டின் எல்லைப்பகுதிகள் பாதுகாப்பாக இருப்பதோடு தொடர் இணைப்பிலும் இருக்க வேண்டியதன் அவசியத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தி உள்ளார்.

புதுதில்லியில் எல்லை சாலை அமைப்பு, தொழில்நுட்ப கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அமைச்சர், மேம்படுத்தப்பட்ட கட்டமைப்பே வளர்ச்சியடைந்த நாகரீக சமூகத்தின் முத்திரையாக திகழ்கிறது என்றார்.

இன்றைய கட்டமைப்பு வரும் ஆண்டுகளில் நாட்டின் நாகரீக வளர்ச்சியை பறைசாற்றும் என்று கூறினார்.

கடைக்கோடி பகுதிகளில் வசிக்கும் மக்கள் நாட்டின் வளர்ச்சி நீரோட்டத்தில் இணைந்து இருப்பதை உறுதி செய்வதே மத்திய அரசின் இலக்கு என்று குறிப்பிட்டார்.

தொழிற்சாலைகள், கல்வித்துறை, பொறியாளர்கள், நிர்வாகத்தினர் ஆகியோர் இணைந்து அறிவுசார் திறனுடன் கட்டமைப்பை முன்னெடுத்துச் செல்ல அவர் அழைப்பு விடுத்தார்.

ரோக்டாங் அட்டல் குகைப் பாதை, Umlingla-வின் அதிஉயர மோட்டார் வாகன சாலை, 13 ஆயிரம் அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ள Sela குகை போன்றவை எல்லை சாலை அமைப்பு படையினரின் திறனுக்கு சான்றாக திகழ்கிறது என்று அமைச்சர் பெருமிதம் தொிவித்தார்.

பொறியியலின் புதுமைகளான இந்த கட்டமைப்புகள் நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கி வடிவமைக்கப் பட்டதற்கு எல்லை சாலை அமைப்பினரை திரு. ராஜ்நாத் சிங் பாராட்டினார்.

. . . . . . . . . .

எல்.முருகன்

நாட்டு மக்களுக்கு எளிதான, விரைவான, வெளிப்படையான சேவைகளை வழங்கும் நோக்கில் மத்திய அரசு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது என மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தொிவித்துள்ளார்.

வடசென்னை பெரியார் நகர் துணை அஞ்சலகத்தில் பாஸ்போர்ட் சேவை மையத்தை இன்று திறந்து வைத்து பேசியஅவர், இதன்மூலம் சுற்று வட்டார மக்களுக்கு பாஸ்போர்ட் தொடர்பான சேவைகள் அருகாமையிலேயே கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

. . . . . . . . . .

சுரேஷ்கோபி

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சென்னை மணலி எண்ணெய் நிறுவன வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் விழாவை மத்திய பெட்ரோலியத் துறை இணை அமைச்சர் திரு. சுரேஷ் கோபி தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் 500-க்கும் மேற்பட்ட மாணாக்கர் பங்கேற்று சுற்றுக்சூழல் உறுதிமொழி ஏற்றனர்.

. . . . . . . . . .

அவினாஷ் ஜோஷி

உணவு பாதுகாப்பில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்று மத்திய உணவுத்துறை செயலர் திரு. அவினாஷ் ஜோஷி தொிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற 17-வது உணவு வர்த்தக தொழில் கூட்டமைப்பு மாநாட்டில் உரையாற்றிய அவர், ஆரோக்கியமான உணவு வகைகளை முன்னெடுத்துச் சென்று பொறுப்புத் தன்மையுடன் கூடிய பதப்படுத்தும் நடைமுறைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

. . . . . . . . . .

அப்பளம்

தமிழ்நாட்டில் அதிக செயற்கை நிறமூட்டிகளை பயன்படுத்தி தயாரிக்கப்படும் வண்ண அப்பள விற்பனைக்கு தடை விதித்து உணவு பாதுகாப்புத்துறை உத்தரவிட்டுள்ளது.

வண்ண அப்பளம் உட்கொள்வதால் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உளுந்து, அரிசியை பயன்படுத்தி தயாரிக்கப்படும் அப்பளத்தை விற்க தடையில்லை என்றும் உணவுத்துறை கூறியுள்ளது.

. . . . . . . . . .

நிர்மல் குமார்

தமிழ்நாட்டில் லாக்கப் மரணத்திற்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் எச்சரித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், லாக்அப் மரண வழக்குகளில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யும் பணிகள் தீவீரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

உடல்நல குறைவு காரணமாகவே புழல் சிறை கைதி உயிரிழந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

பா.ஜ.க. உடன் இணைந்து மத்திய அமைச்சரவையில் இடம்பெற தி.மு.க. முயற்சி செய்வதாக அவர் குற்றம் சாட்டினார்.

பழனி நிலமோசடி வழக்கு தொடர்பாக மாநில அரசில் யாருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என கூறிய அவர், இவ்விவகாரத்தில் தொடர்புடையவர்கள் கட்டாயம் கைது செய்யப்படுவார்கள் என்றார்.

. . . . . . . . . .

**ஆதவ் அர்ஜுனா**

தமிழ்நாட்டில் அரசு விளையாட்டு விடுதிகளில் மாணாக்கருக்கு குளிர்சாதன வசதி ஏற்படுத்தப்படும் என்று மாநில விளையாட்டுத்துறை அமைச்கர் திரு. ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

சென்னையில் தேசிய சீனியர் பேட்மிட்டன் போட்டிகளை இன்று தொடங்கி வைத்து பேசியஅவர், உலகத்தரம் வாய்ந்த பேட்மிட்டன் அகாடமி சென்னையில் அமைக்க திட்டமிடப் பட்டுள்ளதாகவும், கடந்த 60 நாட்களில் 12 கோடி ரூபாய் மதிப்பில் விளையாட்டுத்துறை சார்ந்த திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தொிவித்தார்.

சட்டப்பேரவை மக்களவை உறுப்பினர்களுக்கு விரைவில் விளையாட்டு போட்டி நடத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

. . . . . . . . . .

**தண்ணீர் திறப்பு**

கிருஷ்ணகிரி மாவட்டம் K.R.P. அணையிலிருந்து முதல்போக பாசனத்திற்கான தண்ணீரை ஆட்சித் தலைவர் திரு. தினேஷ்குமார் இன்று திறந்து வைத்தார்.

120 நாட்களுக்கு திறந்து விடப்படும் தண்ணீரின் மூலம் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள 10 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

. . . . . . . . . .

கும்பகோணம் தீ விபத்து

கும்பகோணம் பள்ளி தீ விபத்தின் 22-ம் ஆண்டு நினைவு நாள் இன்று அனுசரிக்கப்படுவதை ஒட்டி இவ்விபத்தில் உயிரிழந்த 94 குழந்தைகளின் உருவப்படங்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

. . . . . . . . . . .

நாமக்கல்

நாமக்கல் மாவட்டத்தில் வேளாண் இயந்திரங்கள் வாடகை திட்டத்தின் கீழ் விவசாயிகள் பதிவு செய்து பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திரு. மதுபாலன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

. . . . . . . . . . .

ஆர்ப்பாட்டம்

தென்காசி மாவட்டம் சங்கரன் கோவிலில் முறையான அனுமதி பெறாமல் செயல்பட்ட 20-க்கும் மேற்பட்ட சாயப்பட்டறை ஆலைகள் மூடி சீல் வைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தொிவித்து அதில் பணியாற்றும் 500-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு மருத்துவக் காப்பீடு திட்டத்தை அமல்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஓய்வுபெற்ற போக்குவரத்து தொழிலாளர்கள், விழுப்புரம் மண்டல போக்குவரத்து அலுவலகம் முன்பு இன்று கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவண்ணாமலை மாவட்டம் பரவனந்தல் கிராமத்தில் கடந்த 15 நாட்களாக குடிநீர் வழங்காததை கண்டித்து அப்பகுதி மக்கள் செங்கம் குப்பநத்தம் சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால், ஒருமணி நேரத்திற்கும் மேல் போக்குவரத்து தடைபட்டது.

. . . . . . . . . . .

கரடி

நெல்லை மாவட்டம் மானூர் கிராமப் பகுதிக்குள் கரடி நடமாட்டம் தென்படுவதால் அதனை பிடிக்க வேண்டுமென்று பொதுமக்கள், வனத்துறைக்கு கோரிக்கை விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

.... வாய்ஸ் ...

. . . . . . . . . . .

**வானிலை**

ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், கரூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி ஆகிய 15 மாவட்டங்களில் இன்று வெப்ப அலை வீசக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தொிவித்துள்ளது.

நாளை கரூர், ஈரோடு, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் வெப்பஅலை இருக்கக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

. . . . . . . . . . .

**கிரிக்கெட்**

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி காா்டிஃபில் இன்று மாலை ஐந்தரை மணிக்கு நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

. . . . . . . . . . .

**பேட்மிட்டன்**

ஜப்பான் ஓப்பன் பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு பி. வி. சிந்து முன்னேறியுள்ளார்.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் பி. வி. சிந்து சீனாவின் ஹான் யூ வை 21-16, 21-14 எனும் நேர் செட்களில் இன்று வென்றார்.

. . . . . . . . . . .

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

. . . . . . . . . . .